# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHI

Case No. STC 1799/2017

Defence Witness 2

| | | | |
|---|---|---|---|
| Name | : சிவகிரீஷ் | Caste | : |
| Father's Name/ Husband's Name | : த/பெ.சோமசுந்தரம் | Calling | : |
| Village | : ஆனைமலை | Religion | : |
| Taluk | : | Age | : 25 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of June 2025.

(புகார்தாரர் மற்றும் எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்)

<u>முதல் விசாரணை</u> :

1. நான் தற்போது ஆனைமலையில் குடியிருக்கிறேன். நான் கோவிலில் பூஜை செய்து வருகிறேன். புகார்தாரர் நான் பூஜை செய்து வரும் கோவிலுக்கு பிரசாதம் போடுவதற்கு வருவார். என் அப்பா மூலம் அவர் எனக்கு பழக்கம். கடந்த 2016 ம் வருடம் என்னுடைய அம்மாவிற்கு புற்று நோய் இருந்ததால் அதனுடைய சிகிச்சைக்கு பணம் தேவைப்பட்டது. புகார்தாரரிடம் இருந்து ரூபாய் ஒரு லட்சம் பணம் வாங்கினோம். வட்டி அடிப்படையில் பணம் வாங்கப்பட்டது. ரூபாய் 15 ஆயிரம் வட்டிக்காக எடுத்துக்கொண்டு ரூபாய் 85 ஆயிரம் புகார்தாரர் கடனாக கொடுத்தார்.

2. 11 மாதத்திற்குள் வட்டியுடன் கடனை திரும்ப செலுத்தவேண்டும் என்று கூறினார். மேற்படி பணத்திற்கு ஆதாரமாக ஆவணங்கள் கேட்டார். என்னுடைய அம்மாவிற்கு வங்கி கணக்கு இல்லை. அதனால் என்னடைய தந்தையின் வங்கி கணக்கில் இருந்து கையொப்பம் மட்டும் இடப்பட்ட பூர்த்தி செய்யாத காசோலை அவரிடம் கொடுக்கப்பட்டது.

3. புகார்தாரரிடம் வட்டி மற்றும் அசலுடன் சேர்த்து ரூபாய் 1 லட்சத்து 65 ஆயிரம் திரும்ப செலுத்திவிட்டோம். அவரிடம் சென்று கடன் வாங்கியபோது கொடுத்த ஆதார ஆவணமான பூர்த்தி செய்யாத காசோலையை திரும்ப கொடுங்கள் என்று

கேட்டபோது மேலும் பணம் பாக்கி உள்ளது என்று புகார்தாரர் கூறினார். புகார்தாரர் எவ்வளவு பாக்கி தொகை உள்ளது என்று பார்த்துவிட்டு கூறுகிறேன் என்று எங்களிடம் கூறினார். ஆனால் இரண்டு நாட்களில் எங்களுடைய வங்கியில் இருந்து எங்களுடைய காசோலை தாக்கல் செய்யப்பட்டு திருப்பப்பட்டது என்று செய்தி வந்தது.என் தந்தை மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளது.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: (வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க வழக்கு குறுக்கு விசாரணைக்காக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/J.Saravanakumar)
Judicial Magistrate No.I,
Pollachi.